மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி மற்றும் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் சி.பழனி, முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துமனையில் கள்ளச்சாராயம் அருந்தி உடல்நிலை பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருபவர்களை நேற்று (16.05.2023) நேரில் சந்தித்து, வழங்கப்படும் சிகிச்சை முறைகள் குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்தனர். உடன் விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர் நா.புகழேந்தி, விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இரா.இலட்சுமணன், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனை முதல்வர் மரு.கீதாஞ்சலி, இணை இயக்குநர் (மருத்துவபணிகள்) மரு.லட்சுமணன் உட்பட பலர் உள்ளனர்.

கள்ளச்சாராயம் அருந்தி பாதிக்கப்பட்டு

முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெறுவோரிடம் நலம் விசாரிப்பு!

அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன் - க.பொன்முடி - செஞ்சி மஸ்தான் நேரில் சென்று கேட்டறிந்தனர்!

விழுப்புரம், மே.17-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி மற்றும் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் ஆகியோர் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துமனையில் கள்ளச்சாராயம் அருந்தி உடல்நிலை பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருபவர்களை நேரில் சந்தித்து, வழங்கப்படும் சிகிச்சை முறைகள் குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்தனர்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அவர்கள் தெரிவிக்கையில், விழுப்புரம் மாவட்டம், மரக்காணம் வட்டம், எக்கியார் குப்பத்தில் கள்ளச்சாராயம் குடித்து உடல்நிலை பாதிப்படைந்த 70 நபர்கள் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த 70 நபர்களில் 13 நபர்கள் மருத்துவ சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர். புதுச்சேரி ஜிப்மர் மற்றும் அரசு மருத்துவமனைகளில் 7 நபர்கள் சிகிச்சை பெற்று வருகிறார்கள். முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனையில் 58 நபர்கள் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டு 8 நபர்கள் உயிரிழந்துள்ளனர். தற்பொழுது 50 நபர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், நேற்றைய தினம் நேரடியாக வருகை புரிந்து, முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனையில் கள்ளச்சாராயம் குடித்து உடல் நிலை பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருபவர்களை பார்வையிட்டு, ஆறுதல் கூறியதுடன், மருத்துவர்களிடம் உடல்நிலை குறித்தும், வழங்கப்படும் மருத்துவ சிகிச்சைகள் குறித்தும் கேட்டறிந்தார்கள்.

மேலும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, உயர்கல்வித் துறை அமைச்சர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் ஆகியோர் மூலம் நிவாரண உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது. இதுமட்டுமல்லாமல், பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான மருத்துவ தேவைகள் மற்றும் மருத்துவ வசதிகள் குறித்து ஆய்வு செய்திடுமாறு அறிவுறுத்தினார்கள். அதனடிப்படையில் இன்றைய தினம் பாதிக்கப்பட்டவர்களை நேரில் பார்வையிட்டு அவர்களுக்கு அளிக்கப்படும் மருத்துவ சிகிச்சைகள் குறித்து கேட்டறியப்பட்டது.

சிறப்பு மருத்துவக் குழுக்கள்!

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, திருவண்ணாமலை, ஸ்டான்லி, சேலம் போன்ற பல்வேறு மருத்துவமனைகளிலிருந்து சிறப்பு மருத்துவக் குழுக்கள் வருகை புரிந்து சிகிச்சை அளிக்கும் பணியினை மேற்கொண்டு வருகிறார்கள். 8 நபர்களுக்கு மேல் டாயாலிசிஸ் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மீதமுள்ளவர்களுக்கு தேவையான மருத்துவ தேவையினை மருத்துவமனை நிர்வாகம் மேற்கொண்டு வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், வருகை புரிந்த போது, பொதுமக்கள் கூடுதல் மருத்துவ வசதிகள் தேவை என கோரிக்கை வைத்துள்ளார்கள். அதனடிப்படையில் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனைக்கு சென்று தேவையான மருத்துவ வசதி மற்றும் மருத்துவ தேவையினை ஏற்படுத்திக் கொடுத்திடுமாறு அறிவுறுத்தியதன் காரணமாகவும், இரண்டு மருத்துவக்குழுக்கள் நிரந்தரமாக மருத்துவ சிகிச்சை வழங்கிடும் வகையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், சிகிச்சை முடிந்து இல்லங்களுக்கு சென்றிடும் வரை சிறப்பான மருத்துவ சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது. சிறப்பு மருத்துவ குழுவிற்கு முதன்மை குடிமை மருத்துவர் தலைமையில் 8 மருத்துவர்கள் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது. அதேபோல், இணை இயக்குநர் தலைமையில், 3 பேர் கொண்ட ஒரு கண்காணிப்புக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. சிறப்புக் குழு மற்றும் கண்காணிப்புக்குழுவில் உள்ள 11 மருத்துவர்கள் தொடர்ந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் சிகிச்சைகள் குறித்து ஆய்வு மேற்கொள்வதோடு மட்டுமல்லாமல், தேவையான மருத்துவ தேவைகளை நிறைவேற்றித் தருவதற்கும் உத்தரவிட்டுள்ளார்கள்.

முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனையில் போதுமான அளவு மருத்துவ கட்டமைப்பு வசதிகள் உள்ளது. தினந்தோறும் 2700க்கும் மேற்பட்டோர் புறநோயாளிகளாக வருகை தந்து சிகிச்சை பெற்று செல்கின்றனர். உள்நோயாளிகளாக 250க்கும் மேற்பட்டோர் உள்நோயாளிகளாகவும் சிகிச்சை பெற்று செல்கின்றனர். சிறப்பான கட்டமைப்பு வசதி கொண்டு மருத்துவமனை என்பதால் பாதிக்கப்பட்டவர்களை தொடர்ந்து மருத்துவர்கள் கண்காணித்து சிகிச்சை வழங்கி வருகிறார்கள் என மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

உயர்கல்வித்துறை அமைச்சர் தெரிவிக்கையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், எக்கியார் குப்பத்தில் ஏற்பட்ட பாதிப்பினை அறிந்தவுடன் உடனடியாக என்னையும், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் அவர்களையும் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருபவர்களை பார்வையிட்டு உடல் நலம் குறித்து கேட்டறிந்திட உத்தரவிட்டார்கள். அதனடிப்படையில், இரண்டு நாட்களாக பாதிக்கப்பட்டவர்கள் சிகிச்சை பெற்று வரும் அனைத்து மருத்துவமனைகளுக்கும் சென்று அவர்களின் உடல் நலம் குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்ததுடன், சிறப்பு சிகிச்சை வழங்கிடவும் உத்தரவிடப்பட்டது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், நேற்றை தினம் வருகை புரிந்து, சிகிச்சை பெற்று வருபவர்களை நேரில் பார்வையிட்டு ஆறுதல் தெரிவித்ததுடன், அவர்களுக்கு வழங்கப்படும் சிகிச்சைகள் மற்றும் தேவையான மருத்துவ வசதிகள் குறித்து கேட்டறிந்தார்கள். இது மட்டுமல்லாமல், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு, தேவையான மருத்துவ வசதிகளை செய்திக்கொடுத்திடுமாறு உத்தரவிட்டதன் காரணமாக, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் வருகை தந்து பாதிக்கப்பட்டவர்களை நேரில் பார்வையிட்டதுடன், மருத்துவர்கள் வழங்கும் சிகிச்சைகள் குறித்தும் கேட்டறிந்தார்கள். மேலும், சிறப்புக்குழு மற்றும் கண்காணிப்புக் குழு ஒன்றினை ஏற்படுத்தி 24 மணிநேரமும் மருத்துவ சேவை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளார்கள்.

கடந்த காலத்தில், 10.09.2001 அன்று சென்னை அம்பத்தூர் அருகே விஷச்சாராயம் குடித்து இறந்தவர்களின் குடும்பத்திற்கு ரூ.25,000/மும், 06.10.2001 அன்று விஷச்சாராயம் அருந்தி உயிரிழந்தவர்களுக்கு ரூ.25,000/மும் வழங்கப்பட்டுள்ளது. 05.12.2018 ஆம் ஆண்டு திண்டுக்கல் மாவட்டம், பள்ளப்பட்டியிலும், காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஒரத்தி கிராமத்திலும், கடலூர் மாவட்டம் ஆலம்பாக்கத்திலும் கள்ளச்சாராயம் அருந்தி மரணமடைந்துள்ளனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், கள்ளச்சாராயம் அருந்தி இறந்தவர்களின் குடும்பம் மற்றும் பிள்ளைகளை காத்திட வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தில் தலா ரூ.10 இலட்சம் வழங்கிட உத்தரவிட்டதுடன், நேரில் சென்று வழங்கிடவும் அறிவுறுத்தினார்கள். அதனடிப்படையிலேயே உயிரிழந்த 13 நபர்களின் இல்லங்களுக்கே சென்று குடும்ப உறுப்பினர்களை நேரில் சந்தித்து நிவாரண உதவித்தொகை வழங்கி ஆறுதல் தெரிவிக்கப்பட்டது என உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி தெரிவித்தார்.

இந்நிகழ்வின்போது, மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனை முதல்வர் மரு.கீதாஞ்சலி, இணை இயக்குநர் (மருத்துவபணிகள்) மரு.லட்சுமணன் உட்பட பலர் உடனிருந்தனர்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மூலம் நடத்தப்படும்

தங்கும் விடுதிகள் - உணவு விடுதிகள் குறித்து ஆய்வு!

அமைச்சர் கா.ராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது!

சென்னை, மே.17-

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகத்தின் மூலம் நடத்தப்பட்டு வரும் தங்கும் விடுதிகள், உணவு விடுதிகள் குறித்து மேலாளர்கள் மற்றும் மண்டல மேலாளர்களுக்கான ஆய்வுக் கூட்டம் - சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது.

சென்னை, வாலாஜா சாலையில் செயல்பட்டு வரும் சுற்றுலா வளாக கூட்டரங்கில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகத்தின் மூலம் நடத்தப்பட்டு வரும் தங்கும் விடுதிகள், உணவு விடுதிகள் குறித்த மேலாளர்கள் மற்றும் மண்டல மேலாளர்களுக்கான ஆய்வுக் கூட்டம் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் அவர்கள் தலைமையில், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மை செயலாளர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக தலைவர் டாக்டர். க.மணிவாசன் முன்னிலையில் நேற்று (16.05.2023) நடைபெற்றது.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதி மற்றும் உணவு விடுதிகளின் செயல்பாடுகள் குறித்து மேலாளர்கள் மற்றும் மண்டல மேலாளர்களிடம் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் ஆய்வு மேற்கொண்டார்கள். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகம் மிகவும் சிறப்பான முன்னேற்றத்தை அடைய மேலாளர்கள், மண்டல மேலாளர்கள் தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகள், அமுதகம் உணவு விடுதிகள், படகு குழாம்கள் மூலமாக அதிக லாபம் ஈட்டும் வகையில், பொதுமக்கள் அதிக அளவில் வருகை தருவதற்கான முயற்சிகளை ஆர்வத்தோடு மேற்கொள்ள வேண்டும். மேலும் தங்கும் விடுதி அறைகளை சிறப்பாக பராமரித்தல், பொதுமக்களை ஈர்க்கும் வகையான உணவு வகைகளை தயாரித்து வழங்குதல் ஆகியவற்றை மேற்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் பேசுகையில் தெரிவித்ததாவது,

தமிழ்நாட்டின் வளர்ச்சியில் முக்கிய பங்கை அளித்த முத்தமிழறிஞர் அவர்கள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தை 1971 ஆம் ஆண்டில் உருவாக்கினார்கள். நாட்டின் அன்னிய செலாவணி வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றும் சுற்றுலாத்துறையில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகம் ஓட்டல் தமிழ்நாடு என்ற பெயரிலான தங்கும் விடுதிகள், அமுதகம் என்ற பெயரிலான உணவு விடுதிகள், சுற்றுலாத் பயணத்திட்டங்கள், சுற்றுலா பேருந்து சேவைகள், படகு சேவைகள், தொலைநோக்கி இல்லங்கள் என சுற்றுலா பயணிகளுக்கு பல்வேறு சேவைகளை வழங்கி வருகின்றது.

கொரோனாவால் பாதிக்கப்பட்டு இருந்த சுற்றுலாத்துறை முதலமைச்சர் அவர்களின் சீரிய முயற்சிகளால் விரைவான வளர்ச்சியை பெற்று இந்தியாவிலேயே சுற்றுலாத்துறையில் முதன்மை மாநிலமாக விளங்கி வருகின்றது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தமிழ்நாடு முழுவதும் 28 ஓட்டல்களை நேரடியாக நிருவகித்து வருகின்றது. இவற்றில் 473 குளிரூட்டப்பட்ட அறைகளும், 199 சாதாரண அறைகளும், மலைப்பகுதி சுற்றுலாத் தளங்களில் 172 அறைகளும் என மொத்தம் 845 அறைகள் பொதுமக்களுக்கு தங்கும் வசதி சேவையை வழங்கி வருகின்றன. ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகள் மற்றும் உணவகங்கள் மதுரை, கோவை, திருச்சி, சேலம், தஞ்சாவூர், ஊட்டி, கொடைக்கானல், ஏற்காடு உள்பட முக்கிய நகரங்களில் பொதுமக்கள் எளிதில் அணுகும் வகையில் நகரின் மையப்பகுதிகளில் செயல்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழக தங்கும் விடுதிகளில் முதியோர்கள், மாற்றுத்திறனாளிகள் ஆகியோருக்கு கட்டண சலுகைகள் அளிக்கப்படுகின்றது. மேலும் திருமணம் உள்ளிட்ட நிகழ்வுகளுக்கு மொத்தமாக அனைத்து அறைகளையும் பதிவு செய்பவர்களுக்கும், தொடர்ந்து 3 நாட்களுக்கு மேல் தங்குபவர்கள், வெவ்வேறு இடங்களில் செயல்பட்டு வரும் ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகளில் தொடர்ந்து 3 நாட்களாக தங்குபவர்களுக்கு பல வகையான கட்டண சலுகைகள் வழங்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், தனது நிர்வாகத்தின் கீழுள்ள அனைத்து ஓட்டல்களின் தரத்தையும், சேவைகளையும் மேம்படுத்தி வருகின்றது.

மேலும் சுற்றுலாப் பயணிகளுக்கு நினைவில் நீங்காத அனுபவத்தை தரும் வகையில், சாகச படகு சவாரி மற்றும் நீர் விளையாட்டுகளுடன் கூடிய படகு குழாம்களை முட்டுக்காடு, முதலியார் குப்பம், உதகமண்டலம், பைக்காரா, கொடைக்கானல், ஏற்காடு, பிச்சாவரம், குற்றாலம் மற்றும் வாலாங்குளம் ஏரி உள்ளிட்ட 9 இடங்களில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் படகு குழாம்களை இயக்கி வருகிறது. வாட்டர் ஸ்கூட்டர்கள், மோட்டர் படகுகள், விரைவு படகுகள், மிதிப்படகுகள், துடுப்பு படகுகள், வாட்டர் சைக்கிள்கள், குழந்தைகளுக்கான மிதிப்படகுகள் என மொத்தம் 588 படகுகள் சுற்றுலா பயணிகளுக்கு நீங்காத அனுபவங்களை அளித்து வருகின்றன.

இவ்வாறு அமைச்சர் கா.ராமசந்திரன் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் பொதுமேலாளர் திருமதி.பாரதிதேவி, முதன்மை கணக்கு அலுவலர் எஸ்.கணேஷ் கார்த்திகேயன், உதவி தலைமை மேலாளர் (ஓட்டல்கள்) த.இமயவரம்பன், திட்ட பொறியாளர் பால் ஜெபஞானதாஸ் உள்பட மண்டல மேலாளர்கள், மேலாளர்கள், உதவி செயற்பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.

சிறந்த தமிழ் நூல்களுக்கான பரிசுப் போட்டி!

தமிழ் வளர்ச்சித்துறை அறிவிப்பு!

சென்னை, மே 17-

தமிழ் வளர்ச்சித் துறையின் வாயிலாக செயற்படுத்தப்படும் சிறந்த தமிழ் நூல்களுக்கான பரிசு வழங்கும் திட்டத்தின்கீழ் பரிசுப் போட்டிக்கு 2022ஆம் ஆண்டில் (01.01.2022 முதல் 31.12.2022 வரை) தமிழில் வெளியிடப்பட்ட நூல்கள் 33 வகைப்பாடுகளின் கீழ் போட்டிக்கு வரவேற்கப்படுகின்றன. போட்டியில் ஒவ்வொரு வகைப்பாட்டிலும் ஒரு நூல் மட்டுமே தெரிவு செய்யப்பட்டு, நூலாசிரியருக்கு ரூ.30,000/- அந்நூலைப் பதிப்பித்த பதிப்பகத்தாருக்கு ரூ.10,000/- என பரிசுகள் வழங்கப்பெறும்.

1.மரபுக்கவிதை, 2.புதுக்கவிதை, 3.புதினம், 4.சிறுகதை, 5.நாடகம் (உரைநடை, கவிதை), 6.சிறுவர் இலக்கியம், 7.திறனாய்வு, 8.மொழி வரலாறு, மொழியியல், மொழி வளர்ச்சி, இலக்கணம், 9.பிறமொழிகளிலிருந்து தமிழாக்கம் செய்யப்படும் நூல்கள், 10.நுண் கலைகள் (இசை, ஓவியம், நடனம், சிற்பம்), 11.அகராதி, கலைக்களஞ்சியம், கலைச் சொல்லாக்கம், ஆட்சித் தமிழ், 12.பயண இலக்கியம், 13.வாழ்க்கை வரலாறு, தன் வரலாறு, 14.நாட்டு வரலாறு, கல்வெட்டு, தொல்லியல், கடலியலும் வணிக வழிகளும், அகழாய்வு, 15.கணிதவியல், வானியல், இயற்பியல், வேதியியல், 16.பொறியியல், தொழில் நுட்பவியல், 17.மானிடவியல், சமூகவியல், புவியியல், நிலவியல் , 18.சட்டவியல், அரசியல், 19.பொருளியல், வணிகவியல், மேலாண்மையியல், 20.மருந்தியல், உடலியல், நலவியல், 21.தமிழ் மருத்துவ நூல்கள் (சித்தம், ஆயுர்வேதம்), 22.சமயம், ஆன்மிகம், அளவையியல், 23.கல்வியியல், உளவியல், 24.வேளாண்மையியல், கால்நடையியல், 25.சுற்றுப்புறவியல், 26.கணினியியல், 27. நாட்டுப்புறவியல், 28.வெளிநாட்டுத் தமிழ்ப் படைப்பிலக்கியம், 29.இதழியல், தகவல் தொடர்பு, 30.பிற சிறப்பு வெளியீடுகள், 31.விளையாட்டு, 32.மகளிர் இலக்கியம், 33.தமிழர் வாழ்வியல்

பரிசுப் போட்டிக்குரிய விண்ணப்பம் மற்றும் விதிமுறைகள் கீழ்க்குறிப்பிட்ட முகவரியில் நேரிலோ, அஞ்சல் வாயிலாகவோ அல்லது இத்துறையின் வலைதளத்திலோ இலவசமாகப் (https:tamil valarchi thurai.tn.gov.in) பதிவிறக்கம் செய்து பெற்றுக்கொள்ளலாம். அஞ்சல் வாயிலாகப் பெற 23X10 செ.மீ அளவிலான சுய முகவரியிட்ட உறையில் 10 ரூபாய் அஞ்சல் வில்லை ஒட்டி அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

போட்டிக்கான விண்ணப்பத்துடன் 10 நூற்படிகளும் போட்டிக் கட்டணம் ரூ.100/- "தமிழ் வளர்ச்சி இயக்குநர், சென்னை" என்ற பெயரில் வங்கிக் கேட்புக் காசோலையாக அளிக்க வேண்டும்.

நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பெற கடைசி நாள் 30.06.2023

அனுப்ப வேண்டிய முகவரி : தமிழ் வளர்ச்சி இயக்குநர், தமிழ் வளர்ச்சி வளாகம் முதல் தளம், தமிழ்ச்சாலை, எழும்பூர், சென்னை 600 008. தொலைபேசி எண்கள். 044 - 28190412, 28190413

இவ்வாறு தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் அறிவித்துள்ளார்.

GREATER CHENNAI CORPORATION
Public Health Department

H.D.C.NO.NULM-SUH/B2A/0976/2022 **NOTICE INVITING EXPRESSION OF INTEREST**

Applications are invited from eligible NGOs/agencies for running shelters for urban homeless established by Greater Chennai Corporation. The eligible agencies / NGO will be empanelled for running the shelter and allotted according to the availability of vacant shelter and their expertise.

The detailed eligibility criteria and application can be downloaded from the Greater Chennai Corporation website (http://chennaicorporation.gov.in/). The letter for Expression of Interest along with the application (as per format) is to be submitted at the below mentioned venue.

Last date of submission of EoI	May 31st 2023
Address for submission of EoI	Office of the City Health Officer, Public Health Department, Amma Maligai, Greater Chennai Corporation
Any clarification please contact	City Level Coordinator 044-25303849

சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம் DIPR / 2593 / Tender / 2023 **City Health Officer**

பெருநகர சென்னை மாநகராட்சி
மண்டலம் - 12

ம.அ.12.ந.க.எண்.இ1/3236/2023 **மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிக்கை**

கீழ்கண்ட பணிகளுக்கு மின்னணு ஒப்பம் இரண்டு உறை முறையில் கோரப்படுகிறது.

வ. எண்	பணியின் விவரம்	பணியின் மதிப்பு தோராயமாக 18% GST நீங்கலாக ரூ.	முன் வைப்பு தொகை	பணி செய்ய தகுதியான ஒப்பந்ததாரின் பதிவு நிலை
1	ம.அ.12.ந.க.எண்.இ1/3236/2023 மண்டலம் - 12ல் உள்ள 64 பூங்காக்களில் ஆண்டு பராமரிப்பு பணி (மேற்பார்வையாளர் செலவினம் உட்பட) (3 ஒப்பங்கள்)	குறைந்தபட்ச பணியின் மதிப்பு ரூ.67.02 இலட்சம் முதல் அதிகபட்ச மதிப்பு ரூ.208.83 இலட்சங்கள்	பணியின் மதிப்பில் 1 சதவீதம்	முதல் வகுப்பு / இரண்டாம் வகுப்பு

ஒப்பப் படிவம் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் : **25.05.2023 மாலை 3.00 மணி**
ஒப்பப் படிவங்கள் **http://tntenders.gov.in** என்ற இணையதளம் மூலம் தெரிந்துக்கொள்ளலாம்.
இணையதளம் மூலம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : **26.05.2023 மாலை 3.30 மணி**

செ.ம.தொ.இ / 2594 / ஒப்பந்தப்புள்ளி / 2023 **மண்டல அலுவலர் / ம - 12**

சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்

58 (அ) வட்டக்கழக செயல்வீரர்கள் கூட்டம்!

ஆர்.பாபு (எ) சந்திரசேகரன் அறிக்கை!

சென்னை, மே 17-

சென்னை கிழக்கு மாவட்டம் எழும்பூர் தெற்கு பகுதி 58(அ) வட்டக்கழக செயல்வீரர்கள் கூட்டம் சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழிகாட்டுதலின்படி இன்று (17.05.2023 புதன் கிழமை) மாலை 6:30 மணி அளவில் எண்.63,பெரம்பூர் பேரக்ஸ் ரோடு வட்ட கிளை கழகத்தில் (ஆர்.பாபு (எ) சந்திரசேகரன் தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு 58வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி.இராஜேஸ்வரி ஸ்ரீதர் எம்.சி. முன்னிலை வகிக்கிறார்.

இக்கூட்டத்தில் எழும்பூர் தெற்கு பகுதி கழக செயலாளர் வி.சுதாகர், எழும்பூர் தொகுதி தலைமை கழக பார்வையாளர் ரத்னா லோகேஷ்வரன் எம்.சி., கழக தலைமை செயற்குழு உறுப்பினர் கே.எஸ்.எம். நாதன். பொதுக்குழு உறுப்பினர் நிர்மலா தேவி, ரசூல், டி.வி.வேலு, எம்.மாறன், கே.அன்னபூரணி, எஸ். ஜெகதீஷ், மாவட்ட, பகுதி, 58(அ) வட்டக்கழக நிர்வாகிகள்,கழக முன்னோடிகள், அனைத்து மாவட்ட, பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாக நிலை முகவர்கள், பூத் கமிட்டி உறுப்பினர்கள் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு 58(அ) வட்டக்கழக செயலாளர் ஆர். பாபு (எ) சந்திரசேகரன் கேட்டுக்கொண்டுள்ளார்.

சென்னை சுற்றுலா வளாக கூட்டரங்கில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகத்தின் மூலம் நடத்தப்பட்டு வரும் தங்கும் விடுதிகள், உணவு விடுதிகள் குறித்த மேலாளர்கள் மற்றும் மண்டல மேலாளர்களுக்கான ஆய்வுக் கூட்டம் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தலைமையில் நேற்று (16.5.2023) நடைபெற்றது. இக்கூட்டத்தில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மை செயலாளர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக தலைவர் டாக்டர். க.மணிவாசன் கலந்து கொண்டனர்.

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி தொகுதி திருநின்றவூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ஆவடி சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 62 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தார் சாலை , பள்ளிகட்டிடம் அங்கன்வாடி புதிய திட்டபணிகளை மாவட்டச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ துவக்கி வைத்து சிறு தொழில் செய்யும் 20 நபர்களுக்கு சிற்றுண்டி கடைகளை நகர மன்ற தலைவர் உஷாராணிரவி முன்னிலையில் வழங்கினார். உடன் ஆவடி மாநகர மேயர் ஜி.உதயகுமார், தலைமை செயற்குழு உறுப்பினர் நடுகுத்தகை ஜெ.ரமேஷ், திருநின்றவூர் நகர கழகச் செயலாளர் தி.வை.ரவி, நகராட்சி ஆணையர் பூகேந்திரி , துணை தலைவர் சரளா நாகராஜ், மற்றும் அரசு அதிகாரிகள் நகரக் கழக நிர்வாகிகள் கவுன்சிலர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.